ராணி காமிக்ஸ்

கரும்புலி

தோன்றும்



# மரண நிழல்

ரு. 3

# என்றும் மறவோம்... வாழ்நாள் வரை

PARLE



## வாழ்க்கைப் பாதை இதுவே சரி

வாழ்க்கைப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு சோதனையே. எந்தப் பாதையில் செல்வது, எதைத் தவிர்ப்பது: நம்மை வேறுபடுத்தும் அடையாளம் இதுவன்றோ. ஒருவித சுயநலமின்றி, எதிர்பார்ப்பின்றி, பிறருக்கு உதவுதல்; பாதையில் செல்கையில் மற்றவர்களின் துயர் நீக்குதல். உண்மையான வாழ்க்கை என்பது இதுதானே. என்றும் மறவோம்... வாழ்நாள் வரை. வாழ்க்கைப் பாதை இதுவே சரி. வருடக்கணக்காக இந்தியாவின் அனைத்திலும் அதிகமாக விற்பனையாகும் பிஸ்கட்.




சுவை மிகுந்தது, உண்மையான சக்தி நிறைந்தது

everest/95/PPL/108tm

ராணி காமிக்ஸ் – 289
(மாதம் இருமுறை இதழ்)
TV
ஜூலை 1 – 15
1996



முகமூடிவீரர்
## கரும்புலி
தோன்றும்



# மரண நிழல்




ஒரு பெரிய மாளிகையில் லூசிபெர் மாபியா என்ற கொள்ளையர்கள் இரகசியமாக கூடி பேசிக்கொண்டிருந்தார்கள்.
அந்தக் கூட்டத்தின் இரகசியத் தலைவன் தன் அறையில் இருந்துகொண்டு ரேடியோ மூலம் மற்றவர்களிடம் பேசினான்.
தோழர்களே! காட்டிலிருக்கும் முகமூடி கரும்புலியை எதிர்க்க சரியான ஆளை நம் கம்ப்யூட்டர் தேடிக் கொடுத்திருக்கிறது!
அப்படியா? உண்மையாகவா?
அவன் நம் ஆட்களைவிட பலசாலி. ஒரே நேரத்தில் 20 பேரை சமாளிக்கக் கூடியவன். அவன் பெயர் நின்ஜா! பாம்பு ஸ்டைலில் சண்டை போடக்கூடியவன்!


ஹா... ஹா... ஹா...!
நம் எதிரியை அழிக்க அவன்தான் சரியானவன்!
படத்தில் இருப்பவன்தான் நின்ஜா!
இவன் நாகப் பாம்பைவிடக் கொடியவன்!
பெயர்: நின்ஜா.
பிறந்த இடம்: மங்கோலியா.
எடை: 100 கிலோ
உயரம்: 6 அடி 2 அங்குலம்.


கரும்புலியை தீர்த்துக் கட்ட சரியான ஆள்தான்!
ஆமாம்!
நின்ஜா கொடூரமானவன்!
பார்த்தாலே தெரிகிறதே!
இவன் நஞ்சை ஊதினாலே போதும்!
எதிரிகள் வீழ்ந்து விடுவார்கள்!


இன்றிலிருந்து நம்முடைய புதிய அத்தியாயம் தொடங்கப் போகிறது!
நல்லது தலைவரே! ரொம்ப நல்லது!
இந்த முறை கரும்புலியை, எப்படியும் தீர்த்துக்கட்டியாக வேண்டும்!
அவனால்தான் இந்தியாவுக்குள் நமது போதை மருந்து வியாபாரத்தை புகுத்த முடியாமல் போனது!
அதேநேரம் காடு மிகவும் அமைதியாக இருந்தது. மிருகங்கள் அமைதியுடன் இரையை மேய்ந்து கொண்டு இருந்தன


காட்டு ராஜா கரும்புலியும் அவரது தோழர் டைகரும் காட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.
கொஞ்ச நாளாகவே காடு மிகவும் அமைதியுடன் இருக்கிறது!
இந்த நேரத்தில் நாம் ஓய்வெடுத்தால்தான் நல்லது!
கொள்ளையர்கள், சமூகவிரோதிகள் கூட அடங்கிவிட்டார்கள் போலிருக்கிறது! எந்த தவறும் நடை பெறவில்லை!
சுறுசுறுப்பாக எதையாவது செய்து கொண்டு இருந்தால் நேரம் போகும்! சும்மா இருப்பது பெரிய அவஸ்தை!



காடு அமைதியாக இருப்பதைப் போல நாடும் அமைதியாக இருந்தால் நல்லதுதான்!
திடீரென்று டைகர் கர்ஜனை செய்தது.
கொர்ர்...!
கொர்ர்...!
இன்றைய பொழுதை பயனுள்ளதாக கழிக்க வேண்டும்! என் முன்னோர்களுடைய வீட்டுக்குச் சென்று பார்த்து வர வேண்டும்!
அந்த நேரத்தில் அமைதியை குலைப்பது போல ஒரு அம்பு பாய்ந்து வந்தது.
என்ன இது?


கரும்புலிக்கு அவசரச் செய்தி வந்தால் இப்படித்தான் அம்பு மூலமாக வந்துசேரும்.
?!
பாய்ந்து வந்த அம்பு மரத்தில் குத்தி நின்றது.
கரும்புலி அம்பில் இருந்த செய்தியை படித்தார்.
?
டைகர் நமக்கு வேலை வந்துவிட்டது!


டிரைபால் கிராமத்தில் உள்ள ஆற்றைக் கடக்கும்போது ஏராளமான பேர் மர்மமாக இறந்துபோகிறார்கள்! எங்களை காப்பாற்றவும்! —தலைவர்.
மரணமா! அதுவும் மர்மச் சாவு? எப்படி?
கரும்புலியும் டைகரும் டிரைபா கிராமத்துக்குச் செல்லும் ஆற்றுக்கு வந்தார்கள்.
நாம் படகு வழியாக இந்த ஆற்றைக் கடப்போம்!


இருவரும் படகில் ஏறினார்கள்.
அமைதியாக இருந்த ஆற்றில் கரும்புலி மெதுவாக துடுப்பு போட்டு படகை செலுத்தினார்.
ஆற்றுக்குள் எப்படி மர்ம மரணம் ஏற்படும்!
இந்தப் பகுதியில் 50 அடி ஆழம் இருக்கும்!
கொர்... கொர்... கொர்...!
!!!


திடீரென்று டைகர் பயங்கரமாக உறுமியது.
கொர்...
கொர்...
கொர்...
என்ன விசயம்? ஏன் இப்படி பதட்டப்படுகிறாய்?
உர்...ர்...
உர்...ர்...
டைகர் எதற்காக இப்படி கத்துகிறது!
அதேநேரம்— ஆற்றுக்குள் இருந்து ஒரு நீண்ட வாள் படகை துளைத்துக் கொண்டு வெளியே வந்தது!
ஆ...!


டைகர் அவசரப்பட்டு ஆற்றுக்குள் குதித்துவிடாதே! படகின் விளிம்பில் நில்!
படகின் எந்தப் பகுதியிலும் வாளால் தாக்கலாம். அத னால் இருவரும் படகின் விளிம்பில் சமாளித்து நின்றார்கள்.
இது யாருடைய வேலையாக இருக்கும்?
டைகர் கால் இடறிக்கூட ஆற்றுக்குள் குதித்துவிடாதே!


டைகர் நன்றாக காற்றை உள் இழுத்துக்கொள்! நாம் இப்போது தண்ணீரின் ஆழத்துக்குச் செல்ல வேண்டும்!
இருவரும் படகில் இருந்து குதித்து ஆற்றின் அடி ஆழத்துக்குச் சென்றார்கள்.
அங்கேதான் கரும்புலியை அழிக்க வந்த நின்ஜா இருந்தான்.
ஓகோ...! இவனுடைய வேலைதானா? யார் இவன்?
இவனை சாதாரணமாக எடைபோட்டு விடக்கூடாது!
நின்ஜா வாளுடன் கரும்புலியை நெருங்கினான்.
இவன் கராத்தே வீரன் போலிருக்கிறானே?


தண்ணீருக்குள் இருவரும் மோதிக் கொண்டார்கள். முதலில் நின்ஜா வின் வாளை கரும்புலி தட்டி விட்டார்.
வாளை கீழே போடு! கையால் மோதுவோம்!
நின்ஜா பயங்கர நகம்பதிக் கப்பட்ட கையுறையை அணிந்திருந்தான்!
இவன் யாராக இருக்கும்?
என் நஞ்சு நகங்களை வைத்து இவன் உடம்பை நார் நாராக கிழித்துவிடுகிறேன்!
நின்ஜா ஆவேசமாக பாய்ந்தான்.


கரும்புலியின் இரும்புக்கை நின்ஜாவை கடுமையாக தாக்கியது
கும்...!
தாக்குதலை சமாளிக்க முடியாமல் நின்ஜா திணறிப்போனான்.
இவனிடம் இருந்து தப்பியாக வோண்டும்! இல்லை என்னைக் கொன்றுவிடுவான்
திடீரென்று தண்ணீருக்குள் கருமை நிற சாயம் ஒன்று படர்ந்து வந்தது.
?!


நின்ஜா தான் தப்பிப்பதற்காக கருநிற சாயத்தை தண்ணீரில் கலந்துவிட்டு கரும்புலியிடம் இருந்து எளிதில் தப்பின்ான்.
இது என்ன குழப்பம்! ஒரு நிமிடத்துக்குள் எதுவும் தெரிய வில்லையே?
சே...! ஆள் தப்பி விட்டானே?
கரும்புலியும் டைகரும் தண்ணீருக்கு மேலே வந்தார்கள்.
நாம் முதலில் டிரைபால் கிராமத்துக்கு வேகமாகச் செல்ல ம்வண்டும்!
ஏய்... வேகமாக நீந்திவா!


இருவரும் கரையை நோக்கி வேக
மாக நீந்திக் கொண்டிருந்தார்கள்.
திடீரென்று ஏதோ ஒன்று கரும்
புலியை உள்ளுக்குள் இழுத்தது.
அடக் கடவுளே!
அதைப் பார்த்த டைகர்
உறுமியது.
கொர்ர்... கொர்ர்....!
?
உடனே டைகர்
தண்ணீருககுள் பாய்ந்தது.
?
கரும்புலியை முதலை ஒன்று
கவ்வி இழுத்துச் சென்றது.
ஆ.... முதலை!


டைகர் முதலையை நோக்கி ஆவேசமாக பாய்ந்தது.
டைகர் முதலையை கடித்துக் குதறியது.
டைகர் முதலையை கடித்ததும் கவ்வியிருந்த கரும்புலியின் காலை விட்டது.
வெரிகுட் டைகர்!
இரண்டும் கட்டிப் புரண்டு சண்டையிட்டன. முடிவில் முதலை டைகரிடம் இருந்து தப்பிச் சென்றது.


பிறகு இருவரும் ஆற்றுக்கு மேலே வர நீந்தினார்கள்.
முதலை வந்ததை நான் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை! அது நம்மை பின் தொடர்ந்து வந்திருக்கிறது!
நாம் இப்போது சூப்பர் சக்தியை பயன்படுத்த வேண்டியது தான்
உடனே இருவரும் தண்ணீருக்கு வெளியே பறந்து வந்தார்கள்.


அடுத்ததாக இருவரும் கரையில் வந்து இறங்கினார்கள்.
டைகர்! இனி நாம் நடந்தே செல்வோம்!
இருவரும் அடர்ந்த காட்டுக்குள் நடந்து சென்றார்கள்.
அப்போது— டைகர் பயங்கரமாக உறுமியது.
கொர்... கொர்...!
அங்கே— அதே நின்ஜா ஆவேசமாக கரும்புலியை நோக்கி பாய்ந்து வந்தான்.


ஆற்றுக்குள் நம்மை தாக்க முயன்ற அதே ஆள்தான் இவன்!
முன்பு தண்ணீருக்குள் தாக்கினான். இப்போது நிலத்தில் மோதிப் பார்க்க ஆசைப்படுகிறான்!
நின்ஜா கரும்புலியை வெறியோடு நோக்கினான்.
நின்ஜா கரும்புலியை தாக்க கராத்தே முறையை பின்பற்றினான்.
பாம்பைப் போல தாக்க முயலுகிறானே?


பாம்பு எதிரியை எப்படித் தாக்
குமோ அந்த முறையில் நின்ஜா
கரும்புலியைத் தாக்க
தயாரானான்.
டைகர்
விலகிப் போ!
அருகில் வராதே!
Z
நின்ஜா, பாம்பு கொத்தும் முறையில்
கைகளை வைத்துக்கொண்டு
தாக்கினான்.
உஷ்...உஷ்...!
படக்!
கரும்புலியும் அவனுக்கு
ஈடுகொடுப்பதுபோல்
தானும் பாம்பு முறையில்
நின்ஜாவை எதிர்த்தார்.


இரண்டு பாம்புகள் மோதிக் கொண்டதுபோல இருவரும் மோதிக்கொண்டார்கள்.
நின்ஜாவின் தாக்குதலை சாமர்த் தியமாக சமாளித்தார், கரும்புலி.
அவர்களின் மோதலை டைகர் விலகி இருந்து பார்த்துக் கொண்டிருந்தது.
இந்தத் தாக்குதலிலும் கரும்புலியின் கையே ஓங்கியிருந்தது.
ஓ!
படார்


இந்த முறையும் இவனை எதிர்க்க முடியவில்லையே? எப்படியாவது தப்பிக்க வேண்டும்!
நின்ஜா திடீரென்று புகை குண்டை வீசினான். அந்த இடமே புகை மண்டலம் ஆனது.
டமால்!
புகையினூடே நின்ஜா கலந்து தப்பி ஓடினான்.
சே! இந்த முறையும் அவனை தாக்க முடியவில்லையே?
புகை மண்டலம் மறைந்தது கரும்புலி சுதாரித்தார்
அவனை எங்கே?
?!


இந்த முறையும் அவன் தப்பி விட்டானே?
வா டைகர்! அடுத்த முறை அவன் வரட்டும் ஒரு கை பார்த்துவிடுவோம்!
இருவரும் டிரைபால் கிராமத்தை அடைந்தார்கள்.
யார் இவனை அனுப்பியிருக்கிறார்கள் என்று முதலில் கண்டு பிடிக்க வேண்டும்!
கிராமத்தில்—
காட்டு ராஜா கரும்புலி நம் கிராமத்திற்கு வருகிறார்!


கரும்புலி நேராகச் சென்று
கிராமத்துத் தலைவரை சந்தித்தார்.
உங்கள் வரவால் எங்கள் கிராமம் புனிதமடைகிறது!
உங்களுக்கு என் உதவி எப்பொழுதுமே உண்டு! உங்கள் செய்தி கிடைத்ததும் தான் இங்கே வந்திருக்கிறோம்!
செய்தியா? என்ன செய்தி? நாங்கள் எந்தச் செய்தியும் அனுப்பவில்லையே?
நீங்கள் அனுப்பவில்லையா?
கரும்புலிக்கு ஆச்சிரியமாக இருந்தது.


நீங்கள் அனுப்புவது போலத்தான் செய்தி வந்தது! இங்கே ஏதோ மர்ம மரணம் நிகழ்வதாக செய்தி இருந்ததே! உதவி கோரப்பட்டிருந்தது!
நாங்கள் எந்தச் செய்தியும் அனுப்பவில்லை! இங்கு யாருக்கும் மரணம் ஏற்படவில்லை!
அப்படியா?
அப்படியானால் செய்தியை யார் அனுப்பியிருப்பார்கள்!
ஒருவேளை நின்ஜாவின் வேலையாக இருக்குமா?
உடனே கரும்புலி தன் இருப்பிடத்துக்கு திரும்பினார் அங்கு நூலகத்துக்குச் சென்று நூற்களைத் தேடினார்.
எனக்கு கராத்தேயில் பாம்பு தாக்குதல் பற்றிய குறிப்பு வேண்டும்!



பாம்புத் தாக்குதல் என்பது மிகவும் ஆபத்தானது. கொஞ்சம் அசந்தால் ஆளை காலி செய்துவிடும்!
பாம்புத் தாக்குதல் நடத்துபவன் கையில் பெரிய நகத்துடன் கூடிய கையுறை அணிந்திருப்பான். நகத்தில் நஞ்சு தடவப்பட்டிருக்கும். எதிரியின் மீது நஞ்சு பட்டுவிட்டால் அந்த இடத்திலே மரணத்தை தழுவவேண்டும்!
நல்லவேளை! என் முகமூடி உடுப்பு பைபர் என்ற கண்ணாடியால் ஆனதால் நஞ்சில் இருந்து தப்பினேன்!
பாம்புத் தாக்குகல்!
எதிரியின் பாம்புத் தாக்குதலை நாம் சமாளிக்கவேண்டுமானால நாம் கீரிப்பிள்ளைப்போல செயல் படவேண்டும்!


ஓகோ...! பாம்பின் எதிரி கீரிப்பிள்ளை என்பது சரிதானே?
பாம்பும் கீரியும் மோதுவதுபோல இருக்கவேண்டும்!
நான் கீரியைப்போல விடாது மோதினால் நின்ஜாவை எளிதில் தோற்கடித்து விடலாம்!
சில நாள் கழித்து. கரும்புலி காட்டில் வந்துகொண்டிருந்தார்.


டைகர், திரும்பவும் டிரைபால் கிராமத்தில் இருந்து செய்தி வந்திருக்கிறது!
திரும்பவும் ஆற்றைக் கடக்கவேண்டும்!
ஆனால் இந்த முறை எதையும் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளுடன் செல்லவேண்டும்!
கரும்புலி டிரைபால் கிராமத்திற்குச் செல்ல ஆயத்தமானார்.
இன்று இரவில் கிராமத்தினரை தாக்கப் போவதாக செய்தி வந்திருக்கிறது!


இந்த முறை நின்ஜாவை தப்பவிட்டு விடக்கூடாது!
கரும்புலியும் டைகரும் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.
நாம் இன்னும் சிறிது நேரத்தில் டிரைபால் கிராமத்தை அடைந்துவிடலாம்!
அதே நேரம்— கிராமத்தில்
தலைவரே! புதுமணத் தம்பதிகள் இருவரும் பாம்பு கடித்து செத்துவிட்டார்கள்!



கரும்புலி டிரைபால் கிராமத்தை அடைந்தார்.
கரும்புலி! எங்களை காப்பாற்றுங்கள்! எங்களை மரண பயம் விரட்டுகிறது!
அப்படியா?
என்ன நடந்தது?
புதுமணத்தம்பதிகள் இருவரும் பாம்பு கடித்து இறந்துவிட்டார்கள். ஆனால் பாம்பை யாரும் பார்க்கவில்லை!
பாம்பு கடித்தா?


நான் இறந்தவர்களின் உடலைப் பார்க்க வேண்டுமே?
வாருங்கள் காட்டுகிறேன்!
இறந்தவர்களின் பிணத்தை காட்டினார்கள்.
இவர்களுக்கு நேற்றுதான் திருமணம் நடந்தது!
கரும்புலி அவர்கள் உடலை பரிசோதித்துப் பார்த்தார்.
ஆ...!
?!!
இவர்கள் கழுத்தில் இருக்கும் காயத்தைப் பார்த்தால் பாம்பு கடித்ததுபோல் இல்லையே? காயம் பெரிதாக இருக்கிறதே?


சந்தேகமில்லை! நின்ஜாதான் தன் நச்சு விரல் நகங்களை வைத்து இவர்களை கொன்று இருக்கிறான்!
அவனுக்கு தகுந்த தண்டனை அழித்தே தீரவேண்டும்!
கரும்புலி தலைவருக்கு சில கட்டளைகளை பிறப்பித்தார்..
தலைவரே! இன்று இரவு கிராமத்தில் நிரைய தீப்பந்தங்களை எரிய விடுங்கள்!
நாம் இரவோடு இரவாக அந்த பாம்பை மடக்கிப் பிடித்து விடலாம்!


பாம்பை பிடித்து விடலாமா?
இரவில் தீப்பந்த வெளிச்சத்தில் பாம்பை நிச்சயம் பிடித்து விடலாம்!
கிராமத்தைச் சுற்றி மரக்கட்டைகளால் தடுப்புவேலி அமைத்தார்.
தடுப்புவேலி மிக கடினமானதுதான். அதில் ஒரே ஒரு வாசல் மட்டும் வைத்தால் நின்ஜா அந்த வாசல் வழியாகத்தான் வரவேண்டும்!


இரவு வந்தது.


டிரைபால் கிராமத்தில் பாம்பின் வருகைக்காக காத்திருந்தார்கள்.


நடு இரவு வந்தது. வாசலில் காவல் இருந்தவர்களுக்கு தூக்கம் வந்தது.
டேய்! பாம்பு இனி வராது. நாம் தூங்குவோம்!


அதே நேரம் நின்ஜா கிராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான்.
காவலாளிகள் நன்றாக தூங்குகிறார்கள்!


வாசலில் காவலுக்கு இருந்தவர்கள் குறட்டைவிட்டு தூங்கினார்கள்.
கொர்...ர்...கொர்...ர்..!
இன்று இந்த காவலாளிகளின் கதையை முடிப்போம். செய்தி அறிந்து எப்படியும் கரும்புலி வருவான்!
ஆனால் கரும்புலி மிகவும் தந்திர மாக மரத்தின் மீது அமர்ந்து நோட்டமிட்டுக்கொண்டிருந்தார்.
காவலாளிகள் நன்றாக தூங்குகிறார்கள்! நின்ஜாவுக்கு கிராமத் துக்குள் செல்ல வசதி யாகிவிட்டது!
நின்ஜா வாசலை நெருங்கினான்.


நின்ஜா நஞ்சு விரல் நகங்களை காவலாளியை நோக்கி நீட்டினான்.
அதே நேரம்— மரத்தில் இருந்த கரும்புலி, சட்டென்று நின்ஜாவின் மீது பாய்ந்தார்.
சரக்...!
கரும்புலி நின்ஜாவை கீழே விழச்செய்தார்.
சத்தம் கேட்டு தூங்கிக்கொண் டிருந்த காவலாளிகள் இருவரும் கண் விழித்தார்கள்.
? ?


ஏய். யார் இவன்! கரும்புலியுடன் மோதுகிறானே?
நின்ஜா பாம்புத் தாக்குதலுக்கு தயாரானான்.
கரும்புலி நின்ஜாவின் தாடையில் ஒரு வெட்டு வெட்டினார்.
ஆ...!
படக்...!
அதற்குள் காவலாளிகள் சத்தம் எழுப்பி மற்றவர் களை உஷார்ப்படுத் தினார்கள்.
ஊஊ... ஊ... ஊ...!


வீட்டுக்குள் இருந்த இளைஞர்கள் தீப்பந்தங்களுடன் வெளியே ஓடிவந்தார்கள்.
வெளியே பாம்பும் கிரிப்பின்ளையும் மோதிக்கொள்வதைப் போலிருந்தது.
அதற்குள் இளைஞர்கள் தீப்பந்தத்துடன் அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.
தீப்பந்தம் என் கண்ணை கூச வைக்கிறது! ஒன்றுமே தெரியவில்லையே?


நான் நினைத்தது சரியாகிவிட்டது! இனி தாக்கவேண்டியது தான்!
கும்...!
எங்கே இப்போது உன் பாம்புத் தாக்குதலை என்னிடம் காட்டுப் பார்க்கலாம்!
கரும்புலி நின்ஜாவின் முகத்தில் ஒரு குத்து விட்டார்.
அடுத்து அவன் சுதாரிப்பதற்குள் காலால் ஒரு உதை கொடுத்தார்.
ஆ...!
படார்...!
படார்..
உன் போலி நகத்தை வைத்துக்கொண்டு விளையாட்டு காட்டுகிறாயா?


இதோ இது கிரியின் தாக்குதல்! எப்படி இருக்கிறது?
சே...! கரும்புலி தீப்பந்தத்தை எரியவிட்டு என்னை மடக்கி விட்டானே?
அய்யோ...!
கும்...!
உடனே நின்ஜா வாயில் இருந்து நஞ்சுவை கரும்புலியின் மீது ஊதினான்.
அட.... நஞ்சுவை என் மீது தெளிக்கப் பார்க்கிறாயா?
?


கரும்புலி சடக்கென்று விலகிக்கொண்டார்.


ஓடப் பார்க்கிறாயா?


உடனே நின்ஜா கரும்புலி மீது புகையை கக்கிவிட்டு மாயமாக மறைய முயன்றான்.
டமால்!


நின்ஜா புகையை கக்கிவிட்டு சட்டென்று மரத்தில் தாவி ஏறினான்.
டமால்!


யாரும் கிராமத்தைவிட்டு வெளியே வராதீர்கள். அந்த பாம்பு மனிதனை நான் பார்த்துக்கொள் ளுகிறேன்!
டைகர் புறப்படு! அவன் அதிக தூரம் சென்று இருக்க முடியாது!
கரும்புலி காட்டில் நின்ஜாவை தேடி அலைந்தார்.
டைகர்! நீ இங்கே தேடு!


டைகர்! அவன் இருந்தால் அவனைப் போகவிடாமல் தடுத்து நிறுத்து! தாக்க வேண்டாம்!
கரும்புலி வேறு திசையில் நின்ஜாவை தேடிச் சென்றார்.
கரும்புலியும் நின்ஜாவை தேடியது..
அதேநேரம்— ஓர் இடத்தில் நின்ஜா இளைப்பாறிக்கொண்டு இருந்தான்.
விடியும் வரை இப்படியே இருக்க வேண்டியதுதான்!


பொழுது புலபுலவென்று புலர்ந்தது.
ஆகா... விடிந்துவிட்டது!
இன்றைக்குள் கருமபுலியின் கதையை முடித்துவிட வேண்டும்!
ஆனால் நின்ஜாவை கரும்புலி தேடுவது அவனுக்குத் தெரியாது.
கரும்புலிக்கு இரும்பு போலத்தான் உடமபு இருக்கிறது!
அவனும் என்னைத் தேடி வருவான்!
சாவைத் தேடி அவன எப்படியும் வந்துதான் ஆகவேண்டும்!


திடீரென்று டைகர் எங்கிருந்
தோ நின்ஜா மீது பாய்ந்தது.
உர்ர்ர்... உர்ர்ர்ர்...!
அதற்குள் நின்ஜா
விலகிக்கொண்டான்.
உர்ர்... உர்ர்ர்ர்...!
டைகர் மீண்டும் நின்ஜா
மீது பாயந்தது.
உர்ர்... உர்ர்ர்ர்...!
உர்...!
ஒருபக்கம் நின்ஜாவை தேடிக்
கொண்டிருந்த கரும்புலிக்கு
டைகரின் உறுமல் கேட்டது.
டைகர்தான்
உறுமுகிறது!
உர்ர்ர்...! உர்ர்ர்ர்...


உடனே கரும்புலி சூப்பர் சக்தியை பயன்படுத்தி ஆகாயத்தில் பறக்க முயன்றார்.
அடுத்த நொடி விர்ரென்று வானில் பறந்தார்.
அங்கே டைகரும் நின்ஜாவும் கட்டிப்புரண்டு சண்டை போட்டார்கள.
உர்... ர்... ர்...
அதற்குள்— கரும்புலி அங்கே வந்து சேர்ந்தார். நின்ஜாவை தட்டிவிட்டார்.


டைகர்! விலகிப் போ! இவனை நான் பார்த்துக்கொள் ளுகிறேன்!
நின்ஜா கரும்புலியை தீர்த்துக்கட்ட ஆயத்தமானான்.
இருவருக்கும் கடுமையான மோதல் நடந்தது.
நின்ஜா தன் நஞ்சு விரல் நகத்தால் கரும்புலியை குத்திக் கிழிக்க முயன்றான்.


நின்ஜாவின் பாம்புத் தாக்குதலை சமாளிக்க கரும்புலி கீரியைப் போல தாக்குதல் நடத்தினார்.
பாம்பு கொஞ்சம் கொஞ் சமாக பின்வாங்கியது.
கரும்புலி சமயம் பார்த்து தாக்குதல் நடத்தினார்.
சர்....ர்...
அடேயப்பா...! என்ன வேகம்!
படார்..


காட்டில் நடக்கும் கடுமையான தாக்குதலை லூசிபர் மர்பியா கும்பலின் வீடியோ காமிரா படம் பிடித்துக்கொண்டிருந்தது.
இருவரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்காமல் மோதிக்கொண்டிருந்தார்கள்.
சர்...ர்...ர்..
லூசிபர் மர்பியாவின் தலைமை அலுவ லகத்தில் இருந்த தலைவன் சாங்கை காட்டில் நடக்கும் சண்டையை நேரி டையாக தொ.கா.வில் பார்த்துக் கொண்டிருந்தான்.
சே...! கரும்புலியின் பொட்டில் குறிவைத்துத் தாக்கினால் எளிதில் வீழ்த்திவிடலாமே?


திடீரென்று கரும்புலி இந்தியன் ஸ்டைலில் நின்ஜாவை தாக்க மேலே எம்பிக் குதித்தார்.
சர்... ர்...
அடுத்த நொடி— கரும்புலி கால் நின்ஜாவின் கழுத்தில் இறங்கியது.
ஆ
நின்ஜா வலிதாங்காமல் ஆவேசமாக கரும்புலியை நஞ்சு நகத்தால் கீற முயன்றான்.
ஸ்... ஸ்...
ஆனால் நின்ஜாவின் தந்திரம் எடுபடவில்லை.
இதுதான் இந்தியன் ஸ்டைல்! எப்படி இருக்கிறது?
ஆ


அடுத்த விநாடி நின்ஜா தரையில் வீழ்ந்தான்.
தொப்...
அங்கே— சாங்கை மிகவும் உன்னிப்பாக தொ.கா. பார்த்துக் கொண்டிருந்தான்.
கரும்புலி கையை தூக்கும்போது நின்ஜா பாம்பை போல ஒரு போடு போட்டு விடலாமே?
ஆனால் கரும்புலி நின்ஜா எழுந்து கொள்ள முடியாமல் கடுமையாக தாக்கினார்.
டமால்
இந்தா! இதுவும் இந்தியன் ஸ்டைல்தான்! எப்படி இருக்கிறது?


கரும்புலி இறுதியாக விட்ட குத்தில் நின்ஜா செயல் இழந்து போனான்.
அம்மா...!
கும்...!
அடுத்த நொடி கரும்புலி முதுகில் செருகியிருந்த வாளை உறுவினார்,
வாளை செங்குத்தாக பிடித்து அப்படியே நின்ஜாவின் நெஞ்சில் இறக்க முயன்றார்.
அதற்குள்—
அய்யோ! என்னைக் கொன்று விடாதே!
கரும்புலியிடம் உயிர் பிச்சைக் கேட்டான்


பயப்படாதே! நான் உன்னை கொல்ல மாட்டேன்! இந்த நஞ்சு நகங்களினால் எத்தனை உயிரைக் குடித்திருக்கிறாய்?
மரியாதையாக லூசிபர் மர்பியாவின் கூட்டத்தில் இருந்து விலகி புதிய வாழ்க் கையைத் தொடங்க வேண்டும்! இல்லை...!
சரி... நீ சொல்கிறபடி கேட்கிறேன்! இனி தவறான பாதைக்கு செல்ல மாட்டேன்!
முதலில் நீ செய்த குற்றங் களுக்கு டிரைபால் தலைவரிடம் உன்னை ஒப்புடைக் கிறேன்!
லூசிபர் மர்பியாவின் தலைவன் அதைப் பார்த்து பொறுமினான்.
சே...! அவமானம்!
?


லூசிபர் மர்பியாவின தலைவன் அவர்கள் ஆட்களிடம் ரேடியோவில் பேசினான்.
சே...! இந்த முறை நாம் அனுப்பிய ஆளும் கரும்புலியிடம் தோற்று விட்டான்!
அப்படியானால் அடுத்தது யார்?
கரும்புலியின் வீரம் நம் கற்பனைக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறது! அவனை அழிப்பது என்பது இனி முடியாது போலிருக்கிறது!
அதனால் நாம் கரும்புலியின் பார்வையில் இருந்து விலகி இருப்பதே நல்லது என்று முடிவு செய்திருக்கிறேன்!
(முடிந்தது)

# தங்கக் கிளி

அழுதா கணேசன்

## 11

முன்கதை சுருக்கம்:-

*சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, எழில்புரி நாட்டு இளவரசி பொற்செல்வியின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்பினான். அவள் மறுக்கவே எழில்புரி நாட்டையே கல்லாக்கி விட்டான். பொற்செல்வி மனம் மாறும்வரை நீ தங்கக்கிளியாக மாறிப்போ என்று சாபமிட்டான். தன்னையும் தன் நாட்டையும் மீட்க ஒரு வீரனைத் தேடி அலைந்தாள். முடிவில் சிங்கபுரி இளவரசன் அஞ்சாநெஞ்சனை கண்டுபிடித்து அவனிடம் உதவி பெற முயன்றாள்.*

“யாரது” அவன் பரபரப்புடன் பார்த்தான்.

“இங்கே பாருங்கள்” என்று இளவரசி சொன்னாள்.

இளவரசன் பின்னே திரும்பிப் பார்த்தான்.

பளபளவென்று மின்னிக்கொண்டு தங்கக் கிளி அமர்ந்து இருப்பதைக் கண்டான்.

அந்த இரவு நேரத்திலும் அதன் அழகு கோடி மடங்கு அதிகமாக இருந்தது.

“தங்கக் கிளி” என்று வியப்புடன் கூறிக்கொண்டே அதன் அருகில் செல்ல இளவரசன் முயன்றான்.

“தயவுசெய்து நீங்கள் அங்கேயே நில்லுங்கள். என் அருகில் வராதீர்கள்” என்று இளவரசி சொன்னாள்.

இளவரசன் அருகில் வந்து தன்னை பிடித்துவிடக் கூடாதே என்ற பயம் அவளுக்கு.

இளவரசன் எட்ட நின்றுகொண்டான். "காட்டில் புலியிடம் இருந்து என்னைக் காப்பாற்றியது நீதானே!" என்று மகிழ்ச்சியுடன் கேட்டான்.

"நான்தான். உங்கள் வீரத்தை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. அன்று சிங்கத்துடன் நீங்கள் போரிட்டதைக்கூட நான் பார்த்தேன்" என்று இளவரசி சொன்னாள்.

அப்பொழுது இரவுக் காவலாளிகள் வந்துகொண்டு இருந்தார்கள்.

இளவரசியின் குரல் அவர்கள் காதில் விழுந்துவிட்டது.

"இளவரசரின் அறையில் இருந்து பேச்சு குரல் கேட்கிறதே" என்றான் ஒருவன்.

"பெண்ணின் குரலாக இருக்கிறதே" என்றான் மற்றவன்.

மேலே எட்டிப் பார்த்த ஒருவன் இருளில் பளபள என்று சன்னலில் அமர்ந்து இருந்த தங்கக் கிளியைப் பார்த்துவிட்டான்.

"ஆ! அதோ பாருடா" என்று அவன் கூவினான்.

"அது என்னடா! இப்படி பளபளப்பாக" என்று மற்றவன் வியந்தான்.

"கிளி போல இருக்கிறதடா."

"தங்கக் கிளிடா."

"அந்தக் கிளிதான் இவ்வளவு நேரம் பேசியதா?"

"அதைப் பிடிக்கவேண்டுமடா."

இருவரும் தங்கக் கிளியை பிடிக்க முயற்சி செய்தார்கள்.

உடனே இளவரசி "விர்" என்று சிறகு அடித்துப் பறந்தாள்.

வேண்டும் என்றே வேகமாக சிறகுகளை அடித்துக்கொண்டாள்.

அப்போது ஒரு சிறகு உதிர்ந்து கீழே விழுந்தது.

தங்கக் கிளி "திடீர்" என்று பறந்து போனது இளவரசன் அஞ்சா நெஞ்சனுக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

அவன் அறையில் இருந்து வேகமாக வெளிப்பட்டு, பின்புற தோட்டத்துக்கு ஓடிவந்தான்.

அவனைப் பார்த்ததும் காவலாளிகள் பயந்து நடுங்கினார்கள்.

"தங்கக்கிளி எங்கே?" என்று அவர்களிடம் அஞ்சாநெஞ்சன் கேட்டான்.

"பறந்து போய்விட்டது" என்று காவலர்கள் சொன்னரர்கள்.

"என்னுடன் பேசிக்கொண்டிருந்த கிளியை ஏன் விரட்டினீர்கள்?" என்று அவர்களை அஞ்சாநெஞ்சன் கடிந்துகொண்டான்.

"எவ்வளவு அழகான கிளி! எவ்வளவு இனிமையாகப் பேசியது! இனி தங்கக் கிளி திரும்பி வருமா?" என்று அஞ்சாநெஞ்சன் வருந்தினான்.

அவன் ஏமாற்றத்துடன் திரும்பியபொழுது இலைகளுக்கு இடையே ஏதோ "மினுக் மினுக்" என்று மின்னுவதைப் பார்த்தான்.

"தங்கக் கிளிதான் அங்கே ஒளிந்து இருக்கிறதோ" என்று நினைத்து ஆவலுடன் ஓடினான்.

தங்கக் கிளியின் இறகு ஒன்று மட்டும் அங்கே உதிர்ந்து கிடந்தது.

அதை இளவரசன் கையில் எடுத்துக்கொண்டான்.

"இந்த சிறகைக்கொண்டே தங்கக் கிளியை தேடிக் கண்டுபிடித்து விடுவேன்" என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

இளவரசன் தன்னைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றுதானே பொற்கொடி அந்த இறகை உதிர்த்துவிட்டுப் போனாள்!

அஞ்சாநெஞ்சன் மிகுந்த ஏமாற்றத்துடன் தனது அறைக்குத் திரும்பினான்.

மீண்டும் கட்டிலில் படுத்துக்கொண்டான்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

யார் இந்தத் தங்கக்கிளி? அது ஏன் தன் பின்னேயே சுற்றிக்கொண்டு இருக்கிறது? என்று அவன் சிந்தித்தான்.

அது பொன்னிறமாக மிகவும் அழகாக இருக்கிறது. அதன் குரல் நிரம்பவும் இனிமையாக இருக்கிறது. இவ்வளவு அழகான கிளியையோ, இவ்வளவு இனிமையாகப் பேசக்கூடிய கிளியையோ அவன் பார்த்தது இல்லை.

கிளி பேசியதை எல்லாம் அவன் நினைத்துப் பார்த்தான். நினைக்க நினைக்க ஒரு பெண் பேசியது போல இருந்தது.

அப்படியானால் அந்தக் கிளி ஒரு பெண்ணா?

அதன் குரல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. ஓர் இளவரசி பேசியது போலத் தோன்றியதே! இளவரசிதான் கிளியாக மாறி விட்டாளோ!

அவள் அழகான இளவரசியாகத்தான் இருக்க வேண்டும். அவளைத்தான் இப்படி கிளியாக மாற்றியிருக்கக்கூடும் என்று அஞ்சாநெஞ்சன் நினைத்தான்.

அவள் எந்த நாட்டின் இளவரசி?

அவளைக் கிளியாக மாற்றியது யார்?

ஏன் கிளியாக மாற்றினார்கள்?

இதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று அஞ்சாநெஞ்சன் தீர்மானித்தான்.

"இந்த மர்மங்களைக் கண்டுபிடிப்பேன்; இளவரசிக்கு மீண்டும் சுயஉரு பெற்றுக் கொடுப்பேன்" என்று அப்பொழுதே அவன் உறுதிமொழி எடுத்துக்கொண்டான்.

"நான் சிங்கத்துடன் போராடியதைப் பார்த்ததாகக் கிளி கூறியது. அப்படியானால், குறைந்தது அன்று முதல் கிளி என்னைப் பின்தொடர்ந்து வந்து இருக்க வேண்டும். ஏன் என் பின்னேயே வந்தது? இந்த இரவில் வந்து "இளவரசே!" என்று என்னை எழுப்பவேண்டிய காரணம் "என்ன?" என்று அஞ்சாநெஞ்சன் யோசித்தான்!

"இளவரசி என் உதவியை நாடியிருப்பாள். அவளைப் பற்றிய



விவரங்களை என்னிடம் சொல்ல விரும்பியிருப்பாள்" என்று அவன் நினைத்தான்.

"அதற்குள் காவலாளிகள் வரவே, எல்லாம் கெட்டுவிட்டது. இனி இளவரசி மீண்டும் இங்கே வருவாளா?" என்று அவன் வருந்தினான்.

"இளவரசி வராவிட்டால் என்ன? எப்படியும் அவளை நான் தேடிக் கண்டுபிடிப்பேன்" என்று அவன் சொல்லிக்கொண்டான்.

தங்க இறகை அவன் கையில் வைத்து இருந்தான். "தங்கக் கிளியைக் கண்டுபிடிக்க, இந்த இறகு பயன்படும்" என்று அவன் நினைத்தான்.

"பின்புறம் இருந்து, புலி என்னைத் தாக்க வந்தபொழுது, தகுந்த சமயத்தில் குரல் கொடுத்து இளவரசி என்னைக் காப்பாற்றினாள். எனவே, அவளுக்கு உதவி செய்யவேண்டியது எனது கடமை" என்று அவன் எண்ணினான்.

தங்க இறகை மார்பில் அணைத்தபடி அஞ்சாநெஞ்சன் தூங்கப் போனான்.

இளவரசன் அஞ்சாநெஞ்சனின் அறையில் இருந்து பறந்து வந்த இளவரசி பொற்செல்வி, அன்றைய இரவை ஒரு மரப்பொந்தில் கழித்தாள்.

அது இரவு நேரம். எங்கும் ஒரே இருட்டு. அந்த இருட்டில் திசை கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும்.

மேலும் இரவில் அவள் பறந்து சென்றால், அவளது தங்கமேனி பளபள என்று மின்னும். அதைப் பார்த்து ஆந்தைகள் அவளை மிரட்டக்கூடும்.

எனவே, இரவைப் பாதுகாப்பாகக் கழிக்க காட்டில் ஒரு மரப்பொந்தை தேர்ந்து எடுத்தாள். அந்தப் பொந்துக்குள் நுழைந்து, வசதியாக அமர்ந்துகொண்டாள்.

நடந்ததையெல்லாம் அவள் நினைத்துப் பார்த்தாள். இளவரசனுடன் அவள் எவ்வளவோ பேசவேண்டும் என்று எண்ணியிருந்தாள். அவளது கதை முழுவதையும் கூறத் திட்டமிட்டு இருந்தாள். காவலர்கள் வந்ததால், அது முடியாமல் போய்விட்டது.

"இதுவும் ஒருவகையில் நல்லதே" என்று இளவரசி நினைத்தாள்.

அவள் மீது இளவரசனுக்கு அக்கறை இருக்கிறதா, இல்லையா? அவளுக்கு அவன் உதவி செய்வானா? இல்லையா? இது இப்பொழுது தெரிந்துவிடும். அவளுக்கு உதவி செய்பவன் என்றால், நிச்சயம் அவளைத் தேடிக்கொண்டு வருவான்.

அவள் இருக்கும் இடம் இளவரசனுக்குத் தெரியாதே? வீணாகத் தேடி அலைவானே!

அலையட்டும். மந்திரவாதி மாயனைத் தேடி அவன் எப்படியெல்லாம் அலையவேண்டியிருக்குமோ!

வீரன் என்றால், சோதனைகள் வர வர, மேலும் மேலும், வலுப்

பெறுவான். கோழை என்றால், சோதனைகளைப் பார்த்து பயந்து ஓடிவிடுவான்.

அஞ்சாநெஞ்சன் சுத்தவீரன். சோதனைகளால் அவன் வலுப்பெறவே செய்வான். எப்படியும் தேடி அவளைக் கண்டுபிடித்துவிடுவான்.

மேலும் கல்லாகிப்போன தனது நகரத்தை அவனுக்குக் காட்ட வேண்டும் என்று அவள் நினைத்து இருந்தாள். இப்பொழுது அவனே அவளைத் தேடிக்கொண்டு அங்கே வந்துவிடுவான்.

"எல்லாம் நன்மைக்காக" என்று நினைத்தபடி அன்றைய இரவுப் பொழுதை மரப்பொந்திலேயே இளவரசி கழித்தாள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், தனது நகரத்தை நோக்கிப் பறந்தாள்.

**ப**க்கத்து நாட்டு இளவரசனுடன் அஞ்சாநெஞ்சன் இருந்தான். அவனை நன்றாக உபசரித்து பரிசுகள் வழங்கி சிறப்பாக வழியனுப்பி வைத்தான்.

தங்கக்கிளி மீண்டும் தன்னைத் தேடி வருகிறதா என்று மூன்று நாள் காத்து இருந்தான். ஆனால், தங்கக்கிளி வரவில்லை. அதன்பின் தன் தந்தையாகிய அரசரிடம் அஞ்சாநெஞ்சன் வந்தான்.

"அப்பா! இந்த சிறகை பார்த்தீர்களா" என்று அவரிடம்தங்க இறகைக் காட்டினான் அஞ்சாநெஞ்சன். அதைப் பார்த்து அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டான். "இது ஏது? உனக்கு எப்படிக் கிடைத்தது" என்று அரசன் கேட்டான்.

தங்கக்கிளி பற்றிய எல்லா விவரத்தையும் தந்தையிடம் அஞ்சா நெஞ்சன் விரிவாகச் சொன்னான்.

தங்கக்கிளியைத் தேடி இளவரசன் புறப்பட்டான்.

"வெற்றி வீரனாகத் திரும்பி வா" என்று அரசர் அவனை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

தங்கச் சிறகை மறக்காமல் இடுப்பில் சொருகிக்கொண்டான் அஞ்சாநெஞ்சன்.

தனது குதிரையில் ஏறி பயணத்தைத் தொடங்கினான். அவன் சிங்கத்துடன் போரிட்டதை பார்த்ததாகத் தங்கக்கிளி கூறியது அல்லவா! ஆகவே முதலில் அந்தக் காட்டை நோக்கிச் சென்றான்.

(தொடரும்)

---

*ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.*

# ரூ. 6 ஆயிரம் பரிசு பெற்ற மாணவ — மாணவிகள் !

**மா**ணவ – மாணவிகளுக்கு புத்தகம் – நோட்டு வாங்க உதவியாக "ராணி காமிக்ஸ்" ரூ. 6 ஆயிரம் கொடுக்க முன்வந்தது.

ஆயிரக்கணக்கான மாணவ– மாணவிகள் விண்ணப்பித்திருந் தார்கள். அவர்கள் அனுப்பிய அஞ்சல் அட்டையில் இருந்து 60 பேரைத் தேர்ந்தெடுத்தோம்.

பரிசுபெற்ற அதிருஷ்டசாலி மாணவ – மாணவிகள் விபரம் வருமாறு:—

(1) விஜயசாந்தி, சென்னை. (2) அலாவுதீன், கூத்தாநல்லூர். (3) ஜாஸ்மின் தங்ககுமாரி, நெய்யூர். (4) செல்வகணேஷ், அருப்புக்கோட்டை. (5) ஜீவா இளங்கோ, பாளையங்கோட்டை. (6) பிரீத்தி, முசிறி. (7) தி. பாலமுருகன், முட்டக்குடி. (8) லலிதாலட்சுமி, கோவில்பட்டி. (9) செந்தில்குமார், தோவாளை. (10) உமாமகேசுவரி, நெய்வேலி.

(11) பழனீஸ்வரன், வில்லுக்குறி. (12) சாந்தி, புதுவயல். (13) தி. கணேசன், மங்களபுரம். (14) த. ஸ்ரீவித்யா, சுந்தரபுரம். (15) ரகுராமன், வீரகனூர். (16) செம்பணன், பொம்மன்பட்டி.

(17) அலமேலு, மடப்பட்டு. (18) எழிலரசன், ராணிப்பேட்டை. (19) ச. பாண்டி மீனா, முத்துப்பட்டினம். (20) செல்வம், இடைப்பாடி.

(21) செந்தில்குமார், சாமல்பட்டி. (22) சோபியா, சென்னை. (23) யுவராஜா, மகாலிங்கபுரம். (24) உஷா, பரப்பாடி. (25) ஜா. மாரிமுத்து, பாண்டிச்சேரி. (26) மகாலட்சுமி, வேலூர். (27) க. கனகசபை, வெண்ணங்குழி. (28) ரெ. பாப்பாத்தி, செங்குளம். (29) பிரபு, முகுந்தராயபுரம். (30) சக்திபிரியா, வீரபாண்டியபட்டணம்.

(31) சு. பிரசாத், சங்கரன்கோவில். (32) க. சசிகலா, நாடுகாணி. (33) பிரேம்குமார், மதுரை. (34) சீனிவாசன், மாட்லாம்பட்டி. (35) த. செந்தில், அம்பகரத்தூர். (36) பாத்திமா, சென்னை. (37) சையது இஸ்மாயில், தேரழுந்தூர். (38) சாலிகு ஆலம், புதுமடம். (39) சு. குற்றாலிங்கம், பழவூர். (40) பா. சிவசங்கரி, இராதாபுரம்.

(41) ரா. ரூபன், தென்தாமரைகுளம். (42) ந. கற்குவேல்ராஜ், மூக்குப்பேரி. (43) ர. தங்கம், மேட்டுப்பாளையம். (44) ஆயிஷா பானு, சேரன்மகாதேவி. (45) ச. இராமச்சந்திரன், கும்பகோணம். (46) பாஸ்கர், கீழவெளியூர். (47) ஜெயந்தி, ஜெயங்கொண்ட சோழபுரம். (48) ஈஸ்வரமூர்த்தி, அரவக்குறிச்சி. (49) விஜயகுமார், இண்டூர். (50) கலாமணி, கஸ்தூரிபா கிராமம்.

(51) மு. இராமசாமி, மூலனூர். (52) சௌ. ராதிகா, திருக்காட்டுப்பள்ளி. (53) பெ. முத்துக்குமார், பணகுடி. (54) மோகனா, வனவாசி. (55) தெ. சொக்கலிங்கம், களக்காடு. (56) சுகி, கருங்கல். (57) விஜேஷ், குன்னத்தூர். (58) மஞ்சுளா, வெள்ளனூர். (59) ச. அருண்குமார், திருநெல்வேலி. (60) கல்பனா, பறங்கிப்பேட்டை.


அடுத்த
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
பாம்புப் பெண்
பாம்புப் பெண்ணின் சூழ்ச்சிகளை முறியடிக்க
வருகிறார், மாயாவி!
விறுவிறுப்பூட்டும் படக்கதை!
படிக்கத் தவறாதீர்கள்!!
ஜூலை 16-ந்தேதி
வெளிவருகிறது!
"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

TAMIL FORTNIGHTLY

Registered as Newspaper in Sri Lanka


# PRESENT SIR !




**Never absent from classrooms and school bags, play fields and lockers, short breaks and lunch breaks.**

ampro® Milk Base

The School going Biscuit

Sista's-EIL-758/91